# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/50 - 2018 ඔක්තෝබර් මස 03 වැනි බදාදා - 2018.10.03

*2091/50 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இல. : 12/2018

**குடிபானமல்லாத ஸ்பிரித்தினை இறக்குமதி செய்வதற்கான மதுவரி**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 2059/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 07/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலில் பந்தி (ஆ) பின்வரும் புதிய பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

"(ஆ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துள்ள ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டுள்ள ஏதேனும் உற்பத்தி நிறுவனமொன்று (இதன் பின்னர் "இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற உற்பத்தி நிறுவனம்" என வாசிக்கப்படும்), மதுவரி அறிவித்தல் இலக்கம் 07/2018 இன் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தியில் 100% பொருட்களும் ஏற்றுமதி செய்யப்படுமாயின் மற்றும் மேற்குறித்த ஏற்றுமதியினை இலங்கை முதலீட்டுச் சபைப் பணிப்பாளர் நாயகம் சான்றுபகருமாயின், அதற்கான மூலப் பொருட்கள் இறக்குமதி மதுவரியானது 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் அறவிடப்படாதிருத்தல் வேண்டும்,

ஆயினும் எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபையில் அவ்வாறு அங்கீகாரம் பெற்று அதன் உற்பத்தியில் ஏதேனுமொரு பங்கினை இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் உள்நாட்டுச் சந்தையில் விற்பனைக்கு ஏதேனுமொரு நிறுவனம் விடுமாயின், அக்குறித்த நிறுவனம் உள்நாட்டுச் சந்தையில் விற்பனைக்கு விடுகின்ற பங்கிற்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள 07/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலில் (அ) பந்தியில் விதிக்கப்பட்டுள்ள மதுவரியினை ஏற்புடமையாக்கிக்கொள்ளல் வேண்டும்."

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, ஒற்றோபர் 03.

10-1011


1A - PG 4266 — 582 (2018/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.